**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

03.06.2026. STC.No. 729/2019 DW1. ஜெகதீஷ்

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.06.2026.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நீரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொல்லி தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2012ல் இருந்து எனக்கு புகார்தாரரை தெரியும் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் பிஎஸ்சி படித்துள்ளேன்.

2012லிருந்து நான் உள்ளூரில் தான் இருக்கிறேன், வெளிநாடு எதுவும் செல்லவில்லை என்றால் சரிதான். பள்ளியாடி லயன்ஸ்கிளப் தெரியுமா என்றால் தெரியாது. பள்ளியாடி லயன்ஸ்கிளப்பில் நான் மெம்பரா என்றால் சேர்த்தார்கள் வருடத்திற்கு ஒருமுறை பணம் கேட்பார்கள் நான் செலுத்துவேன். நான் பள்ளியாடி லயன்ஸ்கிளப்பில் ஒரு உறுப்பினர் என்றும் என்னை உறுப்பினராக புகார்தாரர் தான் சேர்த்துவிட்டார் என்றால் சரிதான்.

புகார்தாரரின் பாபிடிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் என்னுடைய HPCL ஜெகதீஷ் பெட்ரோல் பங்கிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5கிமீ தூரம் இருக்கும். நான் நாகர்கோவில் செல்ல வேண்டும் என்றால் புகார்தாரின் நிறுவனத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் இல்லை. 2006ல் இருந்து HPCL ஜெகதீஷ் பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறேன். அதில் நான் தான் உரிமையளார். எதிரி உரிமையாளர் இல்லை என்றால் சரிதான்.

எனது பெட்ரோல் பங்க்ல் யாராவது கடனுக்கு பெட்ரோல் கேட்டால் போடுவது வழக்கம் என்றால் தெரிந்த நபர்களாக இருந்தால் கடனுக்கு கொடுப்போம். கடனுக்கு கொடுக்கும் பெட்ரோலுக்கு ஒப்பந்தம் ஏதாவது எழுதி வாங்குவோமா என்றால் இல்லை.

பில்லில் கையொப்பம் செய்து வாங்குவோம். கையொப்பம் செய்த பில் என்னுடைய பாதுகாப்பில் இருக்கும் என்றால் சரிதான். HPCL கார்ப்பரேசனில் (திருநெல்வேலி) இருந்து கடனுக்கு பெட்ரோல் வாங்குவோம் என்றால் ஒரு சில முறை கடனுக்கு கொடுப்பார்கள்.

புகார்தாரர் அதிக தொகைக்கு பெட்ரோல் வாங்கி அதற்கு அட்வான்ஸ் ஆக ரூபாய் 10,00,000/- கொடுத்தார் என்றால் சரிதான். புகார்தாரர் கடனுக்கு பெட்ரோல் கொடுத்தது போல் வேறு யாருக்காவது பெட்ரோல் கடனுக்கு கொடுத்துள்ளோனா என்றால் நிறைய நபர்களுக்கு கொடுத்துள்ளேன். கடனுக்கு கொடுக்கும் நபர்களிடம் அட்வான்ஸ் ஆக பணம் வாங்கியுள்ளேனா என்றால் ஒரு சில நபர்களிடம் வாங்கியுள்ளேன்.

அட்வான்ஸ் தொகை பெற்றதற்கு ஆதரவாக காசோலை அல்லது பத்திரமோ எழுதி கொடுத்துள்ளோனா என்றால் ஒரு சில நபர்களுக்கு கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். நான் சொல்வது போல் யாருக்கும் காசோலையையோ பத்திரமோ அட்வான்ஸ் தொகைக்காக எழுதி கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

HPCL கார்ப்பரேசனுக்கு எந்த முறையில் பணம் செலுத்துவேன் என்றால் RTGS மூலமாக பணம் செலுத்துவேன். எ.த.சா.ஆ 3 ஆவணத்தில் கிளாஸ் 55(4)ன் படி 4 நாட்களில் பணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்றும், கிளாஸ் 56ன் படி கார்ப்பரேசன் கேட்கும் போது அவர்கள் சொல்லும் தேதியில் பணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நடைமுறைப்படி நான் செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன்.

HPCL கார்ப்பரேசனுக்குரிய வங்கி கணக்கு எண் எனக்கு மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். HPCL கார்ப்பரேசனுடன் நான் வைத்திருந்த வங்கி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என் மனைவி எதிரி B.Sc படித்துள்ளார். அவருக்கு எழுதப்படிக்க தெரியும். புகார்தாரரின் வங்கி கணக்கில் இருந்து HPCL கார்ப்பரேசனுக்குரிய வங்கி கணக்கிற்கு 15.05.2018ம் தேதியன்று காசோலை எண் 050137 என்ற காசோலை மூலமாக ரூ. 10,00,000/- பணம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் தான் புகார்தாரரிடம் இருந்து பெற்ற காசோலையை ரூ. 10,00,000/– ற்க்கு HPCL கார்ப்பரேசன் பெயரில் பூர்த்தி செய்து RTGS பார்ம் மூலமாக நானும் எதிரியும் சேர்ந்து அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். வங்கியில் கேட்டார்கள் விவரங்கள் கொடுத்தோம். அவர்கள் அனுப்பிவிட்டார்கள். எ.த.சா.ஆ. 1 பான் புரோக்கர் லைசன்ஸ் ஆவணத்தில் என்னுடைய பெயர் மட்டும் தான் உள்ளது எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான்.

எ.த.சா.ஆ.1 ஆவணத்தில் புதுப்பிக்கும் தேதி 31.03.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேல் பகுதியில் தேதி 05.02.2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கல்குளம் தாசில்தார் கையொப்பம் செய்த தேதி 15.02.2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதுப்பிக்கப்பட வேண்டிய தேதியை 2017ல் இருந்து 2019 ஆக மாற்றி எழுதியுள்ளேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.1 ஆவணத்தில் புதுப்பிக்கும் தேதியில் திருத்தம்செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அதை நான் செய்யவில்லை.

பான் புரோக்கர் லைசன்ஸ் 2017ற்கு பிறகு 2022ல் தான் புதுப்பிக்கப்பட்டுளளது என்றால் சரிதான். 2017ற்கு முன்பு புதுப்பிக்க வேண்டிய லைசன்ஸ்களை ஒரு ஆண்டுகால இடைவெளியில் புதுப்பித்துள்ளேன் என்றால் சரிதான். த.நா.பான் புரோக்கர் சட்டம் பிரிவு 11ன் படி ஒருவருடத்திற்குள் லைசன்ன்ஸ் புதுப்பிக்க வேண்டும் என்றும், 7 நாட்கள் கிரேஷ் டைம் என்றும் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும்.

எ.த.சா.ஆ.1 ஆவணத்தில் 4வது பக்கத்தில் Renewed upto என்ற தேதியை 2022ல் இருந்து மாற்றி 2025 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு கீழ் கல்குளம் தாசில்தார் கையொப்பம் செய்த தேதி 27.07.2022 என்று உள்ளது என்றால் சரிதான். தேதியை திருத்தம் செய்ததற்கான கையொப்பமோ, முத்திரையோ இல்லை என்றால் சரிதான். புகார்தாரர் என்னுடைய ஜெகதீஷ் பைனான்சில் இருந்து கடன் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை.

எ.த.சா.ஆ.2 ஆவணத்தில் என் பெயர் மட்டும் தான் உள்ளது எதிரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். எ.த.சா.ஆ.1 ஆவணத்தில் 31.03.2016ற்கு பிறகு 2019 வரை லைசன்ஸை நான் புதுப்பிக்கவில்லை என்றால் சரிதான். 2022ல் தான் புதுப்பித்துள்ளேன். எ.த.சா.ஆ.3 ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த

ஆவணத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். எ.த.சா.ஆ.3 ஆவணம் HPCL கார்ப்பரேசன் நிறுனத்தின் குத்தகை ஆவணம் என்றால் சரிதான். குத்தகை ஒப்பந்தத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.த.சா.ஆ. 1 முதல் 3 வரையிலான ஆவணங்களுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

HPCL கார்ப்பரேசன் நிறுவனத்துடன் நான் மேற்கொண்ட பரிவர்த்தனைகள் தொடர்பான வங்கி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். புகார்தாரர் HPCL கார்ப்பரேசன் நிறுவனத்திற்கு அனுப்பிய ரூ. 10,00,000/- மூலமாக தான் பெட்ரோல் வாங்கி ரோட்டேசன் மூலமாக வியாபாரம் செய்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரார் கொடுத்த ரூ. 10,00,000/-ற்கு நான் டீசல் கொடுத்துள்ளேன்.

**(புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram.